DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 99/2023

Miscellaneous :

Sessions : DW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | நாகராஜன் |
| Father / Husband Name | தேவராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகம் அஞ்சல் அலுவலகத்தில் Sub Post Master ஆக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது, அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் RT121719395IN என் consignment 24.04.2023 அன்று மதுராந்தகம் துணை அஞ்சலகத்தில் புக் செய்யப்பட்டுள்ளது. அந்த அ.சா.ஆ.4 ஐ பார்த்தால் அந்த அஞ்சல் சித்தாமூர் அஞ்சலகத்திற்கு சென்றுள்ளது. அங்கு உரிய நபருக்கு அஞ்சல் சார்பு செய்யப்படாமல் மீண்டும் மதுராந்தகம் அஞ்சல் அலுவலகத்திற்கு வந்துள்ளது. 03.05.2023 மற்றும் 04.05.2023 ஆகிய தேதிகளில் அந்த அஞ்சலை அனுப்பிய நபருக்கு நாங்கள் Intimation கொடுத்துள்ளோம். 06.05.2023 அன்று அந்த அஞ்சலை அனுப்பிய நபரிடமே மீண்டும் கொடுத்துள்ளோம். அந்த அஞ்சல் என்ன காரணத்திற்காக உரிய நபரிடம் சார்பு செய்யப்படவில்லை என்பதை அந்த அஞ்சல் உரையை பார்த்தால் தான் சொல்லமுடியும்.

2. அந்த அஞ்சலை அனுப்பிய நபரிடமே கொடுத்தபோது அவரிடம் கையொப்பம் பெறுவோம். **(அவ்வாறு அந்த அஞ்சலை அனுப்பிய நபரிடம் கொடுத்தபோது அவரிடம் பெறப்பட்ட கையொப்பம் அடங்கிய Delivery Slip ன் உண்மை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** RT121719395IN என்ற தபால் உரிய நபருக்கு சார்பு செய்யப்படாமல் அதை அனுப்பிய நபருக்கு திருப்பப்பட்டுள்ளது. அந்த தபாலை பார்த்தால் தான் அந்த தபால் யாருக்கு அனுப்பப்பட்டது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. Consignment எண்ணை பார்த்தால் அந்த தபால் யாரால் யாருக்கு அனுப்பப்பட்டது என்ற விவரத்தை கணினியில் எடுத்துக்கொள்ள முடியுமா என்றால் கணினியில் 6 மாதம் தான் அந்த விவரங்கள் இருக்கும். அந்த தபாலை பெறும் அஞ்சல்

அலுவலகத்தில் ஒரு Register பராமரிப்பார்கள் அதை பார்த்தால் அந்த அறிவிப்பு யாருக்கு அனுப்பப்பட்டது என்று தெரிந்து கொள்ளலாம். ஆனால் அந்த Register யும் ஒன்னறை ஆண்டுகள் தான் பராமரிப்பார்கள். ஒன்னறை ஆண்டுகளுக்கு பிறகு அந்த ஆவணங்களை அழித்துவிடுவோம். RT121719395IN என்ற அஞ்சல் எந்த தேதியில் அதை அனுப்பிய நபரிடம் திரும்ப கொடுக்கப்பட்டுள்ளது என்றால் பெற்ற நபர் அதில் கையொப்பம் மட்டும் தான் போட்டுள்ளார், தேதி குறிப்பிடவில்லை. எங்களுடைய Delivery Slip படி 06.05.2023 அன்று அந்த அஞ்சலை அனுப்பிய நபரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

4. அந்த அஞ்சல் 24.04.2023 அன்று புக் ஆகியுள்ளது. புக் ஆன பிறகு அதே தேதியிலேயே செங்கல்பட்டு RMS க்கு அனுப்பியுள்ளோம். அங்கிருந்து 25.04.2023 அன்று சித்தாமூருக்கு சென்றுள்ளது. 02.05.2023 அன்று சித்தாமூர் அஞ்சலகத்தில் இருந்து அந்த அஞ்சல் செங்கல்பட்டு RMS க்கு திருப்பப்பட்டுள்ளது. என்ன காரணத்திற்காக அந்த அஞ்சல் சித்தாமூரில் இருந்து திருப்பப்பட்டது என்ற காரணம் அ.சா.ஆ.4 ல் இல்லை. ஆனால் பொதுவாக அதற்கான காரணம் குறிப்பிடப்பட்டிருக்கும், ஏதோ தொழில்நுட்ப கோலாரால் குறிப்பிடப்படவில்லை. தொழில்நுட்ப கோளாரால் குறிப்பிடப்படவில்லை என்று நானே யூகித்து சொல்கிறேன் என்றால் சரிதான். சித்தாமூர் அஞ்சலகத்தில் பணிபுரிபவர்களை விசாரித்தால் இதற்கான காரணத்தை தெரிந்துக்கொள்ள முடியுமா என்றால் எனக்கு தெரியவில்லை.